உ

பஹ்வந்தர் துணை.

மகாமகத்துவம்பொருந்திய தெய்வலோகவாசியான

ஊர்வசி திருவாய்மலர்ந்தருளிய

# இரசவாதசிட்கா.

இஃது

இராயவேலூர் குயப்பேட்டை வைத்தியம்

சதயோக சிவஞான தேசிகர்

ம-ா-ா-ஸ்ரீ,

V. K. சுந்தரேஸ்வர முதலியார் அவர்கள்

மாணாக்கராகிய

மேற்படியூர் வித்வான்

வே. ஸ்ரீ. பாலகிருஷ்ண முதலியாரால்

எழுதப்பட்டு,

பூ. சு. குப்புசாமி முதலியாரது

ஸ்ரீசுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1924.

மூன்றாம்பதிப்புகாபி - 1000.

REGISTERED COPY RIGHT.

இதன் விலை அணா-4.

உ

பகவந்தர் துணை.

# ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் சகல அச்சுக்கூடத் தலைவர்களுக்கும் மற்றயாவர்களுக்குந் தெரிவிப்பது யாதெனில்:—

இந்த "ஊர்வசி இரசவாத சிட்கா" என்னும் புத்தகத்தை ம-ா-ா-ஸ்ரீ, வித்வான் வேலூர் வே.ஸ்ரீ. பாலகிருஷ்ணமுதலியார் அவர்கள்பேரிலிருந்த ரிஜிஸ்தர் காபிரைட் சுதந்தரத்தை அடியிற் கையொப்பமிட்ட பூ. சு. குப்புசாமிமுதலியாராகிய நான் கிரையத்திற்கு பெற்றுக்கொண்டு என்னால் அச்சிட்டு வெளிப்படுத்தியிருப்பதால் இந்நூலையாவது, அல்லது இதை வேறு பாஷையில் மொழிபெயர்த்தாவது, அல்லது இதில் ஏதேனும் பாகத்தையாவது, என்உத்திரவன்றி ஒருவரும் அச்சிடலாகாது. அப்படி அச்சிட்டால் 1867-ஆம்வருஷத்து 25-வது-ஆக்ட்டு 20-வது-பிரிவு 6-வது விதிப்படி யான்கோரும் நஷ்டத்திற்கும், பினல்கோர்ட்டு செக்ஷன் குற்றத்திற்கும் உத்திரவாதிக ளாகவேண்டுமென்பதைக் கவனிக்கக்கோருகிறேன்.

இப்படிக்கு,

பூ. சு. குப்புசாமிமுதலியார்.

ஸ்ரீசுந்தரவிலாசஅச்சுக்கூடம்,

வேப்பேரிபோஸ்ட், மதராஸ்.

உ

பஹறவந்தர் துணை.

# முகவுரை.

என தன்பார்ந்த நண்பர்களுக்குத் தெரிவிப்பது யாதெனில்:—

ஊர்வசிஇரசவாதசிட்கா என்னும் இந்நூலானது எனக்குக் கிடைத்த ஓலைச்சுருள்களில் இதுவும் ஓர் சுவடியாய்க்கிடைத்தது. இதில் அனேக ஏடுகள் சிதருண்டு சிலது மாத்திரமே பூர்த்தியான விஷயங்களை அடையப்பெற்றிருந்தது. ஆதலால் ஷை சுவடி ஓலைகளோடு முன்னோர்கள் எழுதியசாஸ்திர முறைகளையும் ஒன்றுசேர்த்து இக்கிரந்தத்தை பூர்த்திசெய்யப்பட்டது. மேலும் உலகினில் அனேகர் இரசவாதம் பொய்யென்று சாதிக்கிறார்கள். அதுசரியல்ல அப்படிபொயானால் முன்னோர்களாகிய நாதாக்கள் மூதாக்களெல்லாம் தங்கள் நூல்களில் எழுதுவார்களோ? "தெய்வத்தாலாகாதெனினும் முயற்சி மெய்வருந்தக்கூலிதரும்" என்று நாயனார் கூறியபடியும் "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்பதுபோலவும் விடாமுயற்சியுடன் செய்தால் ஒவ்வொரு காரியமும் சித்தியாகும். மேலும் "வெந்தழலின் இரசம்வைத்து ஐந்துலோகத்தையும் வேதித்து விற்றுண்ணலாம்" என்றுதாயுமானவரும் கூறியிருக்கின்றார். ஆதலால் "செய்வன திருந்தச்செய்" என்று நமது மூதாட்டிக் கூறியவண்ணம் கவனித்துச்செய்தால் ஷை காரியம் தடையின்றி சித்திக்கும். ஆனால் இத்தொழில் சித்தியாமற்போவதற்கு

அனேக காரணங்களுண்டு அதாவது பேராசையும், அவசரமும், சரக்குகள் தெரியாமல் ஒன்றுக்கு பதில் ஒன்று சேர்த்து செய்வதும் கைபாகம் செய்பாகம் கணக்கின்பாகம் தவருதலேயாம் எப்படியெனில் நமது வீடுகளில்சமைப்பது சாதாரணமாய் அரிசியும் ஜலமுமேயாயினும் புதிதாய் ஒருவன் சமையல் செய்யுங் காலத்தில் திகைத்து ஷெ பாகத்தை சரியாய்முடிக்காமல் ஏக்கமடைவது சகஜமல்லவா? இதற்கே இப்படியிருந்தால் ரசாயனசாஸ்திரம் இன்னதென்றும் தெரியாதவர்கள் கண்டபடி சரக்குகளையெல்லாம் சுட்டுச் சுட்டு வீணுகிருர்கள் என்பதும்ஓர் ஆச்சரியமா? ஆதலால் ஷெ சாஸ்திரமுறைகளை வரிசைக்கிரமமாகவும் சத்துருமித்துரு, உப்பு, புளி, பஞ்சபூதம்முதலிய சரக்குகள் இன்னதென்பதும் இன்னன்னகாலத்தில் இன்னன்ன ஔஷதங்கள் முடிக்கவேண்டுமென்பதையும் அவைகளின் பரிக்ஷைகளையும் அவைகளை வியாதிகளுக்கு உபயோகப்படுத்தும் விதங்களும் வாதவேலைக்கு உபயோகப்படுத்தும் விதங்களும் ஆகிய எண்ணிறந்த விஷயங்களை சாங்கோபாங்கமாய் இதில் எழுதலாயினன்.

மேலும் இதை ஒரேபுத்தகமாக அச்சிடகாலதாமதமாகு மென்பதைப்பற்றி அனேக பாகங்களாகப் பிரித்து சிறு புத்தகங்களாகவே அச்சிட எண்ணங்கொண்டவனுய் முதல் பாகமாகிய இப்புத்தகத்தை முதலில் அச்சிட்டு வெளியிடலாயினன். இதில் ஏதாகினும் குற்றங்குறைகள் இருக்குமாகில், அதை எடுத்துக்காட்டினுல் அடுத்தபதிப்பிற்கு திருத்திக்கொள்ள ஏதுவாயிருப்பதுமல்லாமல் அவர்களுக்கு அனேகவந்

நனங்களும்புரியக் கடமைப்பட்டிருக்கின்றேன். இனி இரண்டாம்பாகத்தில் சித்தர்நூல்களின் இரகசியங்களையும், சரக்குகளின் வைப்புகுணம் முதலிய விவரங்களையும் அனேக அபூர்வமுறைகளையும் எழுதப்படும்.

## முன்னோர்களின் வாக்கு.

"கண்டுகண்டுதேரினவ ரனேகருண்டு
காணாமல்விட்டவர்க ளனேகருண்டு
தொண்டுசெய்துபெற்றவர்க ளனேகருண்டு
தொல்லையென்றுவிட்டவர்க ளனேகருண்டு
பண்டுதொட்டுவினைகள்வந்து வாய்க்குமாகில்
பலிக்குமடாவாதவித்தை யாவுந்தானே"

(அகஸ்தியர் பரிபாஷை 500 — 1?0)

இப்படிக்கு,

வே. ஸ்ரீ. பாலகிருஷ்ண முதலியார்.

உ

பஹறவந்தர் துணை.

மஹாமகத்துவம்பொருந்திய
தேய்வலோகவாசியான

# ஊர்வசி இரசவாத சிட்கா

## முதல்பாகம்.

### காப்பு.

தாதுநால்மரை வேதம்விளங்கிய
நாதவிந்துமாராஜ யோகவாழ்க்கையால்
ஓதும்பைந்தமிழ் ஆயிரத்தைந்துநூா
மாதுஊர்வசி வாரியைப்போற்றுவாம்.

### சொரூபதுதி.

ஏகமாகி இருந்தப்பர்ாபரம்
தேகஜீவசை தன்னியசித்தனே
யோகமாக நினைந்திடும்ஊர்வசி
தோகையாள்சொலும் வாதசுருக்கமே.

### பஞ்சபூத தினுசுகள் விவரம்.

பூதநிரம்-மஞ்சள், பளிங்கு-சிகப்பு, கருப்பு-புகை, லோகத்தில்:—பி-பொன், அ-காரீயம், தே-தாம்பரம், வா-அயம், ஆ-நாகம், சூதம். கருவில்:—பி-மலம், அ-சிருநீர், தே-உதிரம், வா-வாய்நீர், ஆ-விந்து. பாஷாணத்தில்:—பி-தாளகம், அ-வீரம், தே-லிங்கம், வா-வெள்ளை, ஆ-கெந்தகம், லவணங்களில்:—பி-கல்லுப்பு, இந்துப்பு,வளையலுப்பு, அ-மூன்றுவிதசாரம், தே-சவு

ட்டுப்பு, வெடியுப்பு சூடன், வா-வெங்காரம், துரிசி சினம், ஆ-பூரம்வழலை. பாஷாணபிரிவில்:—பி-கொட்டி, அ-சிங்கி கார்முகில் பவழப்புற்று, தீமுருகல், அ-கௌரி சங்குபாஷாணம் குதிரைப்பல், கோழி தலை, தே-சிலைவீரம் தாரம் கெந்தி, வா-பஞ்சபக்ஷி ரத்தபாஷாணம் லிங்கம், ஆ-சூதம். உபரசத்தில்:—பி-சிலாசத்து அயகாந்தம் பூநாகம் இராசவர்த்தம், அ-சங்கு, கோழிபண்டம் கிளிஞ்சல் நண்டு, தே-எலும்பு, இந்திரக்கோபம் மயிலிறகு நிமளை வெண்காரம், வா-சாத்திரபேதி கல்நார் கல்மதம் அன்னபேதி ரோமம், ஆ-துத்தம் வைகிராந்தம் சுக்கான்மிருதி பாஷாணம்.

இதில் பஞ்சபூதங்களின்

தலை எழுத்துக்களைமாத்திரம் குறிப்பிட்டிருக்கிறேன்.

## சரக்குகள் மொத்தம்.

பிரிதிவு காரவகை-13, அப்பு சாரவகை-12, தேயு வைப்புவகை-32, வாயுவிளைவுவகை-32, ஆகாயம் உபரசவகை-120, ஆகமொத்தம் - 209. இந்த பஞ்சபூத சரக்குகளைதெரிந்து சத்துருமித்துருகண்டு ஒன்றால் ஒன்றைக்கட்டி நீற்றினம்செய்ய உத்தமம்.

## இதற்குப் பிரமாணம்.

பாரப்பாபிரிதிவ்தான் அப்பைக்கொள்ளும்
பாங்கான அப்பதுதான் தேய்வைக்கொள்ளும்
நேரப்பாதேய்வதுதான் வாய்வைக்கொள்ளும்
நிலையானவாய்வது ஆகாசத்தைக்கொள்ளும்
வீரப்பாகொண்டதிலே மடிந்துபோச்சு
வேதாந்தபஞ்சகர்த்தாள் கூத்தீதாச்சு
சாரப்பாதன்னறிவால் சார்ந்துகொண்டு
சகலகுருவேதைமுகம் சார்ந்துப்பாரே.

## அஷ்டலோக மாரண இனுசுகள்.

சூதம், கெந்தி, காரம், சாரம், வீரம், பூரம், வெள்ளை, வெடியுப்பு, சமனிடைகளாகக் கூட்டி பழாசத்தாலரைத்து லோகதகட்டுகளின்மீது சமனுகப்பூசி கெஜபுடமிட்டாலும், சாரம், சீனம், பாஷாணம், பூரம், வீரம், வெடிகாரம், சூதம், பூநீர், கெந்தி, புனுகு சமமாக பழாசத்தி லரைத்து முன்மாதிரியாகப்பூசி புடமிட்டு பிறகு பஸ்பம் செந்தூரம் செய்து நோயாளர்க்கு உபயோகப்படுத்த மேலோர் கூறியிருக்கின்றனர்.

வெள்ளீயம் தாளகத்திலும், காரீயம் சிலையிலும், உருக்குலிங்கத்திலும், தாம்பரம் கெந்தியிலும், வெள்ளி மாட்சிகத்திலும், பொன்நிமிளையிலும் மரணமாகும்.

## ஔஷதம் முடிக்கும் காலம்.

பங்குனி சித்திரையில் முப்பும், வைகாசி ஆனியில் சாரணையும், ஆடி ஆவணியில் திராவகமும், ஐப்பசி கார்த்திகையில் உருக்கினமும், புரட்டாசி மார்கழியில் செந்தூரமும், தை மாசியில் ஜெயநீரும், செய்துக்கொள்ள நன்மையாகும்.

## இதைமுடிக்க இவைவேண்டும்.

வங்கநீர் சவுக்காரத்தால் துருசி நீரும், கெந்தி சூதத்தால் செந்தூரமும், வெடியுப்பு சீனத்தால் திராவகமும், அமுரிதெரிந்தால் ஜெயநீரும், உருக்கினங்கள் காரம் குடோரிகளால் வீரத்தால் நீற்றினம், புடத்தால் சாரணை, இனந்தப்பில் வர்னமிராது, தங்கத்தால் களை சூதம்நீங்கில் ப்யனிராது, சுன்னம் சேராவிடில் ஜெயநீர் கெடும். சாரம்நீங்கில் பட்டுபடாது.

## கட்டுதினுசுகளின் பரிட்சை.

கல்லுப்பு கரியிலுருகவும். வெடியுப்பு தந்தம்போ லிருகியும், வெண்காரம் பொங்கியுருகியாடவும், சீனம் மணிபோலுருகவும், சூடன் எரியாமலும், இந்துப்பு வெடிக்காமலும், சாரம் மயிற்போல் புகைந்தும், கட்டு துரிசி இளகாமலும், நீரின துரிசி மஞ்சளில் சிவக்கவும் இருப்பது நலம்.

5 6 4 3 2

பஞ்சபூதசரக்குகள் $1\frac{1}{4}, 1\frac{1}{2}, 1, \frac{3}{4}, \frac{1}{2}$, இந்தஎடைகளாக சேர்க்காமல், பிரிதிவ் சரக்கு அதிகமானல் கடித்துக்கொள்ளும். அப்புசரக்கு அதிகமாகில் தளுக்காக ஊரலேறும். தேயுசரக்கு அதிகமாகில் புடத்திற்கு நிற்காமல் ஓடிவிடும். வாயுசரக்கு அதிகமாகில் புத்துப்போல்நின்று எடை குறையும். ஆகாயசரக்கு அதிகமாகில் வர்னமிராது.

### ஒவ்வோருசித்தரும் அவரவர்முறைகளில் கூறிய பஞ்சபூத உப்பின் விவரம்.

குருமுனிவர்:—பி-கம்பியுப்பு, அ-பாரையுப்பு, தே-கல்லுப்பு, வா-இந்துப்பு, ஆ-வளையலுப்பு,

போகர்:—பி-கல்லுப்பு, அ-சத்திசாரம், தே-வெடியநீர், வா-சீனம், ஆ-பூநீர்.

சுகபோக ரிஷி:—பி-பூமிஉப்பு, அ-சீனமென்றவெள்ளை தே-ரவிநாதம்பூரம், வா-வீரமெனுங்கௌரி, ஆ-காரமெனுஞ்சாரம்.

பிரமமுனி:—தன்னுள்நாதம் விந்து பாரை கல்லுப்பு அண்டம் பிண்டம்.

கருப்பஞ்சபூதம்:—(வாய்நீர், முலைப்பால்) அமுரிவிந்து சுரோணிதம்.

அருசரக்கு:—கல்லுப்பு சாரம் வெடி படிகாரம் துரிசி, வெண்காரம்.

அருவகைநீர்:—வெடிசீனம், வெங்காரம் சாரம், பூரம், துரிசி.

## நாதவிந்து சரக்கு.

கெந்தி - சூதம், பூநீர்-சூடன், நிமளை-வெள்ளை, பூநர்கம்-வீரம், திரிகுணசல்-கடல்நுரை, லிங்கம்-கல்லுப்பு, இரும்பு - எவாச்சாரம், நாகம், வங்கம்-பூரம், செம்பு-சிலாசத்து, காந்தம்-கல்மதம்.

## உப்பு புளி சரக்கு.

சிறுநிருப்பு-மலம், வெடி-படிகி, கல்லுப்பு-பழம் புளி, சூடன்-துரிசி, கடல்நுரை - கற்சுன்னம், சூதம்-கெந்தி, காந்தம்-காடி, இரும்பு-எரியாமணக்கெண்ணெ, தொட்டி-புளியரணை, பேதி-அம்பர், மாங்கிஷபேதி-கல்மதம், வீரம்-புளியாரை, அபரேகம் - காயசரக்கு, கௌரி-புளிமாங்காய், வெள்ளை-கள்ளு, வைகிராந்தம்-நிமிளை, தங்கம்-சிலை, நாகம்-வீரம், விந்து-நாதம், சாரம்-வெண்காரம், வெண்கரு-மஞ்சள்கரு, கிளிஞ்சிஓடு-சதை, பச்சைக்கர்ப்பூரம் - இந்துப்பு, இவை ஒன்றிலொன்றடக்கமாகும்.

## சத்துரு மித்துரு விவ்ரம்.

தங்கத்திற்கு:—சத்துருநாகம், நிமிளை, வெடி, கௌரி, வெள்ளை, சவுட்டுப்பு, தாளகம், சிங்கி, அபிரேகம், சிலை, அண்டஓடு, குதிரைப்பல், சூதம், கெந்தி, கோமுகம், காந்தம், வீரம், பொன்னம்பர், மற்றத் தினுசுகள் மித்துருவாகும்.

கருவங்கத்திற்கு:—சத்துரு அயம், காந்தம், நிமிளை, கிளிஞ்சி, அண்டம், நண்டு, நத்தை, கௌரி, கெந்தி,

அபிரேகம், வெடி, கல்லுப்பு, கல்நார், சாஸ்திரபே தி, மித்துரு:—பூநாகம், மயூரச்செம்பு, நாகம், செம்பு, வெள்ளி, வெள்வங்கம், சூதம்.

அயத்திற்கு:—சத்துரு வெண்கலம், காரம், அண்டம், அபரேகம், நிமிளை, வங்கம், திரு, கெந்தி, சிலை, சாரம், வீரம், சிங்கி, கௌரி, சிலாசத்து, வெள்ளை, பூநீர், மித்துரு:—வெள்ளி, செம்பு, காந்தம், நாகம், பூரம், தங்கம், கெந்தி, மயூரச்செம்பு, சூடன்.

நாகத்திற்கு:—சத்துரு கிளிஞ்சி, அண்டம், கல்லுப்பு, வெடி, தங்கம், திரு, வெள்ளி, வீரம், நண்டோடு, வெங்கலம், சிங்கி, அபினி, மிளகு, வெள்ளை, வளையலுப்பு, அன்னபேதி, மித்துரு:—கௌரி, செம்பு, சூதம்,நாகம், கெந்தி, அபிரேகம், இரும்பு, காந்தம், சாரம், காரீயம், மாயூரச்செம்பு, சிலாசத்து.

துரிசிக்கு:—சத்துரு சவுக்காரம், வங்கம், நாகம், இந்துப்பு, காந்தம், சிங்கி, கற்சுவடு, கல்லுப்பு, வெள்ளைப்பாஷாணம், சூடன், அப்பிரேகம், வெடியுப்பு, தொட்டி, அஞ்சனபாஷாணம், மித்துரு:—லிங்கம், கௌரி, நிமிளை, மனோசிலை, பூரம், சூதம், கெந்தி, வெங்காரம், வீரம், சாரம், அரிதாரம்.

சாரத்திற்கு:—சத்துரு கடல்நுரை,அப்பிரேகஞ், சவு காரீயம், கல்சுன்னம். யேரண்டத்தோல், வளையலுப்பு, காந்தம், வங்கம், இந்துப்பு, படிகாரம், கல்லுப்பு, மித்துரு:—செம்பு, ரசவர்க்கம்,நிமிளை, கௌரி, நாகம், லிங்கம், கல்நார், வெடியுப்பு, வீரம், கெ சிலை, தாரம், காரம்.

வேடியுப்பு:—சத்துரு சூடன், சவுடு, காரீயம், வெள்ளீயம், துரிசி, காந்தம், வெள்ளி, செம்பு, இரும்பு,

சிலை, தொட்டி, தீமுருகல், அண்டம், கெந்தி, சிங்கி, மித்துரு:—தந்தம், தாரம், துத்தம், நாகம், லிங்கம், வீரம், காரம், படிகி, கல்லுப்பு, இந்துப்பு, கடல் நுரை, நிமிளை, வெள்ளை.

கல்லுப்பு:—சத்துரு வீரம், சகடு, சிங்கி, சிலை, பழம்புளி, பவழப்புத்து, சவுட்டுப்பு, ராசவர்த்தம், மித்துரு:— செம்பு, லிங்கம், வங்கம், காரம், கௌரி, பூரம், அபிரேகம், வெள்ளை, நாகம், தாரம். இரும்பு.

சீனத்திற்கு:—சத்துருசிலாசத்து, துத்தம், மித்துரு:— உபரசபாஷாணலோகங்கள்.

காந்தத்திற்கு:—சத்துரு புளி, சாம்பிராணி, அண்டோடு சிலாசத்து, பூரம், காரம், மித்துரு:—உபரசங்கள், பாஷாணங்கள்.

சூதத்திற்கு:—சத்துரு பூநீறு, கர்ப்பூரம், நிமிளை, வெடியுப்பு, இரும்பு, காந்தம், குதிரைப்பல், சத்திச்சாரம், கௌரி, வெள்ளை, சிங்கி, மித்துரு:—தீமுருகல், பவழப்புத்து, சாரம், வெங்காரம், துத்தம், வெள்ளி, செம்பு, துருசு, தொட்டி, தாளகம், சிலை, வீரம், கெந்தி, வங்கம், காரீயம், நாகம், அப்பிரகம்.

☞ சத்துரு சரக்கால்கட்டி மித்துரு சரக்கால் குருவாக்கவேண்டும்.

## இரசவாதம் இன்னதென்பது.

இரசவாதமென்பது சூதம் யென்று சொல்லப்பட்ட பாதரசத்தை நெருப்பிற்கோடாமல்கட்டி அதை [illegible]ன்னம் செந்தூரம்முதலிய பிரயோகங்களாகச் செ[illegible]து அதை உலோகங்களில் பிரயோகித்தால் அந்த [illegible]லோகமானது ஷெ அவுஷதத்தால் பழுத்துப் பொன்னாகுமென்பது சாஸ்திரம். தனிரசத்தை எடுத்துக்

கொண்டு அவுஷதம்முடிப்பது அதிக கஷ்டமாதலால், அதுசம்பந்தப்பட் டிருக்கும்படியான பாஷாணங்களைக்கொண்டு தொழில்செய்வது இலேசென்பது சிலருடையகொள்கை. இரசவாதம் யென்பதற்கு வாதவேலையென்றும், வகாரமென்றும், கீமியா என்றும் பலவிதநாமங்கள் சொல்லுவார்கள். ஷை இரசவாத வேலையானது மூலிகைத்தொழில் யென்றும், காரசாரத்தொழில் என்றும் இருவகைப்படும். மூலிகைத் தொழிலென்பது மூலிகைகளின் சரத்தாலும், மூலிகைகளை அரைத்தவிழுதினாலும் ரசக்குகளைக் கவசம்செய்தும் சுருக்குக் கொடுத்தும் நெருப்பிற் கோடாமல் கட்டி ஒளஷதப் பிரயோகங்களாகச் செய்து அந்த உலோகங்களின்மீது பாய்ச்சி பழுக்கவைப்ப தாக்கும் காரசாரம் என்பது உப்புக்களினால் ஜெயநீர் திராவகம் முதலியதுகள் செய்து அவற்றால் சரக்குகளைக் கட்டி தொழில் செய்வதாகும். மேற்கூறிய இருவகைப்பிரயோகங்களில் காரசாரத்தொழில்தான் சுளுவானதும் சிலாக்கியப் பட்டதுமாகும். இதற்கு தாரணமாக "காரசாரம்வாலே காதாபீதா, பூடிவாலே புக்கமார்தா" யென்னும் பழயமொழியுமுண்டு அதாவது காரசாரத்தொழில் செய்பவன் சாப்பிடுகிறான் குடிக்கிறான். மூலிகைத்தொழில்காரன் கஷ்டப்படுகிறானென்பதே. ஏனெனில் மூலிகைகளுக்கெல்லாம் சாபம் உண்டென்றும் ஷை சாபத்தை நீக்கி உயிர்ப்பித்தாலொழிய ஷை மூலிகைகள் தொழில் செய்யா தென்றும் மகன்னியர்கள் எழுதி யிருக்கின்றனர். இதற்கு எம்முடைய "மூலிகைஜாலரத்தினம்" என்னும் புஸ்தகத்தை பார்வையிட்டால் மூலிகைசாப விமோசனம் தெரியும். மூலிகைத்தொழில் பிரயோசனமில்லை யென்பது "ஞானவெட்டியான்" (1500)

"மூலிகையைத்தொட்டு முக்கால்சுருக்கிடவும்
கேலியதுவெய்துமெனுங் கேள்விகாண்—மூலிகையால்
பட்டுப்புகைந்துவிடும் பராசரக்கத்தனையுந்
தொட்டாலுங்கெட்டுவிடுஞ் சொல்."
வாதிகளுங்கூடி மயங்கித்தழைகளினீர்
வேதையிருக்குதென்று வீண்பாடு—வாதிகளும்
மலைகள்குகைதிரிந்து வைத்திருந்தபொக்கிஷத்தை
அலைந்துசுட்டு கரியாக்கினார்."

## வள்ளுவர் திருப்புகழ்.

வேலிவேலிதழை காய்கிழங்குகனி
நாலிநாலியென யாகும்யாகுமென—இதுமோசம்"

என்றும் எழுதியிருக்கின்றனர். ஆனால் மூலிகை வேலைமுற்றும் பிரயோசன மற்றதென்று யாம் கூறவில்லை. காரசாரவேலை அதிகசுளுவும் சிலாக்கியப்பட்டதென்பதற்காகவே ஷை பிரமாணங்களை யெழுதலாயிற்று.

## காரசாரம் இன்னதென்பது.

காரம்பூநீர் கல்லேஜீவரத்தினம்
கைப்பில்லாக்களி மண்ணிலுதித்திடல்
சீரதாகுமாசிப் பிறைநாளினில்
சிவக்கெழுந்த கதிரவன்சாயலால்
பேரனந்தம்புளி யுப்புவருந்தான்
பேசுவார்பேதமெழு வகைத்தோற்றத்திலும்
சாரமார்ந்துவர் சைதன்யஉப்பதாந்
தசைதான்தீட்சை பூமிஞதமிதாகுமே.

## இதுவே பிரம்மகற்பமெனல்.

பூமிநாதம் புவியிலுதித்திடும்
பூவதும்பிரம்ம கற்பமதாகிவிடும்
நாமெனுவூர் வசியருள்பூவினை
நாட்டில்தோருமிப் பூவினைக்கண்டுவாழ்

ஆமிவைபங்குனி யில்செங்காயதாம்
அன்னுள்பின்சித்திரைக் கனியதாம்
மாமிவைவய தஞ்சுமாசிதனில்
மைத்தபங்குனி வயதெட்டரையுமே.

## காரம் என்பது பூநீர் எனல்.
(வள்ளுவர்-16)

காரானவீரமென்றும் பச்சையென்றுங்
கதிரென்றுங்கன்னியுட நாதமென்றும்
பேரானபிணமென்றும் குருவண்டென்றும்
பேர்பெறியகும்பக்கல் வழலையென்றும்
வாரானபுளியென்றும் சவ்வாதென்றும்
வகையாகஜங்கோல வன்னியென்றும்
கூரானகோசமென்றுங் குமரியென்றும்
குணமானநீர்மேல்நெருப் பென்றுந்தானே.

தானனசிலையென்றுந் தாரையென்றும்
தற்பரையாய்சத்திசிவ தாயேயென்றும்
கோனனையானையென்றுங் குதிரையென்றும்
கூருவார்நாமங்கள் பேதாபேதம்
வீராகஇதனலே மாந்தரெல்லாம்
வெவ்வேறுய்செய்தழிந்து விருதாவானர்
மானன்காரமென்ருல் மண்தானப்பா
மண்ணிலேமகத்தான மண்தான்பாரே.

பாரேநீதைமாசி மீனம்மூன்றில்
பனிக்குமேசந்திரனில் விந்துவாலே
சீரேகேள்மண்தனிலே ஜலமேபாய்ந்து
சிக்கியதில்ரேசித்து ஜெனிக்குங்காலம்
வாமேதான்றவிபடர்ந்து பூர்க்கும்பாரு
வானவர்கள்மெச்சுகின்ற வழலைமைந்தா
மீராமல்மெறியவிட்டு மூன்றுநாளும்
விடிந்தவொருநாலாநாள் ரவிக்குமுன்னே.

ரவிதானும்படுகொமுன் னதனைவாங்கி
நாதாந்தமூர்த்தியரைப் பணிந்தெடுத்து
கவியாதேஇதற்குநிகர் வேறுமில்லை
சந்திரனைதரித்தசிவ மைந்தனுர்க்கு
புவிமீதில்சொல்லிவிட்டேன் காரந்தன்னை
புத்தியினுல்செய்பாகம் அறிந்துக்கொள்ளே.

## சாரம் என்பது அமுரிஎனல், (சூத்திரம்-30)

கேளேநீசாரமென்றால் நவாசாரமல்ல
கெடியானவெண்காரம் வெடியுப்பல்ல
தாளேநீகேசாதி பாதமட்டும்
தனியாகவளர்ந்துதடா தண்ணீருக்குள்
கேளேநீயுன்சடத்தி லுண்டுவுண்டு
கேட்டால்தான்கொடுப்பார்கள் கேள்விவேண்டும்
சாளானசிதம்பரத்தில் வளர்ந்தசாரம்
சடலமதிலிந்துப்பைன் றிதற்குப்பேறே.

ஆமென்றுசொல்லுகிறே னதுயேதென்றால்
அடவானஉன்னுடைய உடலுக்குள்ளாம்
ஆமென்றவாசமதாய்ப் பழுத்திருக்க
வளர்ந்துதடா ஒழியாதஅருவியாகி
தாமென்றஉன்னுடைய தாளின்கீழாம்
தாரைகொண்டேகுதுபார் அமுரிதானும்.

## முப்புவென்பது இன்னதெனல்.

மலிவிலாதவாயிவங்கி யப்புமூன் றுமுப்பதாம்
வெளியில்ரெண்டுகுழியில்ஒன்று மீனமேஷமல்லவோ
சலவிலாதநாதநீரில் மேவியாடுந்தீக்ஷையாம்
தேவதேவநீயலாது செம்பனென்றஅம்பரம்
விலாதயோகமெய்ஞ் ஞானமுங்கைமேல்வரும்
சிலாதசூதராஜன் வானிலோடியேவரும்
யின்மீதிலண்டபிண்ட நாதமேகநீரடா
அங்கையென்றவழலையுப்பு ஆதியானகுருவிதே.

## அகஸ்தியர் சூத்திரம்.

அப்புவேமுப்புஅல்லது வேறொன்றுகுமோ
யாவதர்க்கியல்போ
துப்புகெட்டவனே உப்பினைப்பிடித்தால்
சூதமும்புரைகழன்றுடும்
தப்பில்லைவேத பாச்சலாம்யோக
சாதனைசெய்திடர்க் கெனவே
பற்பமுமொன் றெளிதிலுரைத்தனன்
பொதிகைபருவதத்தினி லிருப்பவனே
என்னவேவானத் திடியினிலொன்று
கன்னியமான கடல்தனிலொன்று
பொன்னெனப்பூத்த பூமியிலொன்று
முன்னவர்சொன்ன முப்பூவிம்மூன்றே.

## ஞானவெட்டியான் (1500)

பூருவத்திலுதித்தகடல் கல்லுப்பாகும்
பூனீரினுப்பதுவு மழுரியுப்பும்
வாறறிந்துமுப்பொருளு மூன்றுப்பாகும்
வகைவகைக்குப்பலமதுவாய் வகுத்துப்பின்பு
சருகாமல்பறங்கிவைப்பு பலந்தான்கூடன்
தனையெடுத்துக்குளிக்கல்லில் சமையத்தானும்
கருதாமல்வெண்கருவா லிரண்டுசாமம்
கணக்காகமையதுபோல் கருதிடீரே.

## வே று.

கருதியும்வழித்தே யெடுபில்லைகாண்
கதிரவன்தனில் காய்ந்தெடுவெட்டினில்
சுருதிமேல்மூடியொன்று புடமதில்
துரிதமாய்க்கனலாறி எடுத்திடும்
குறுமுனியருள் திருவள்ளுவனுரை
கூறிடும்பெரியோர்கள் மகத்துகள்
தொழுதுவாலைப்பதம் பணிந்தர்ச்சனை
தொழுதால்பணிந்தாண்டே யுணருவார்.

சிலநூல்களில் அண்டக்கரு பிண்டக்கரு வெடுத்து தொழில் செய்யும்படி சொன்னது பரிபாஷையெனல்.

அண்டமாவது கோழியினண்டமோ
பிண்டமாவது தன்தலைப்பிண்டமோ
இந்தவண்டல்ரெண்டையும் கண்டறியாதவர்
கண்டபோதல்லோ காண்பதுசொர்னமே.

## தாம்பிரம் சுத்திசெய்யும் முறைகள்.

வெள்ளைக்கல்லும் நவாசாரமும் சமநிடைகளாக எடுத்து எலுமிச்சம் பழரசம்விட்டரைத்து தாம்பிரத் தகட்டிற்கு கனக்க கவசம்செய்து நன்றாய் உலரவை த்து அதற்குமேல் அரைத்த சீக்காயை அப்பி ஐந்து மண்சீலைசெய்து இருபது வரட்டியில் புடம்போடவும் சுத்தியாகும். அல்லது ஷை கல்லும் சாரமும் சேர்த் தரைத்தக் கலப்பை செம்புக்கா சுக்கு இருபக்கமும் தடவி கரி நெருப்பில் போட்டு சிவக்கவூதி ஜலத்தில் தோய்க்கவும் இருபக்கத்திலும் உள்ள மருந்து களிம் புடன்பேர்ந்துவிழும் இப்படி பத்துவிசை செய்யவும் சுத்தியாகும்.

## (2) தாம்பிரசுத்தி (வேறு)

தாம்பிரத்தை மெல்லிய தகடாக அடித்து மனோ சிலையை ஆகாசத்தாமரை ரசம்விட்டரைத்து மேல்படி தகட்டிற்கு இருபுரமும்பூசி ஒட்டிலிட்டு பத்தெருவில் புடம்போடவும் இருபுரமும் பச்சையாக களிம்புமேல் வந்திருக்கும் மறுபடியும் முன்போலவே புடம் போட வும். தாம்பிரம் வெட்டையாகி நொருங்கிப் போகும் அதை ஒருசட்டியில்போட்டு எலுமிச்சம் பழச்சாரும் புளியிலைச்சாறும்விட்டுக்கொதிக்கவைத்து அதில்ஜலம்,

விட்டு பிசைந்து தெளியவைத்து இறுத்து விடவும் இப்படி ஐந்தாறுவிசை செய்யவும் சட்டியின் அடியில் சுத்தமான தாம்பிரப்பொடிக ளிருக்கும் அதை மூசையிலிட்டு வெங்காரம்போட்டு உருக்க ஷை பொடிகள் உருகி சுத்தமான தாம்பிரமாகும்.

## (3) தாம்பிரசுத்தி (வேறு)

வெங்காரக்கட்டும் நவாச்சாரக்கட்டும் அண்டச் சுன்னமும் ஓரிடையாய் யெடுத்துப் பொடித்து தூள் செய்து தாம்பிரத்தைஉருக்கிக் கண்விட்டாடும்போது ஷை தூளைக் கிராசம்கொடுக்கவும் சுத்தியாகும்.

## (4) தாம்பிரசுத்தி (வேறு)

ஆனை நெருஞ்சிலையை யரைத்துக் கவசம்செய்து மண்சீலை மூன்று மேலேசெய்து ஐந்து வரட்டியில் புடம்போடவும் இப்படி நாலைந்து புடம்போட சுத்தியாகும்.

## (5) தாம்பிரசுத்தி (வேறு)

குட்டித்தக்காளியிலை, அவுரியிலை இரண்டையும் ரசம்பிழிந்து வைத்துக்கொண்டு வெங்காரம், வீரம், துருசு மூன்றையும் சமனிடைகளாக எடுத்து மேல்படி ரசம்விட்டரைத்து தாம்பிரத்தகட்டிற்குப் பூசி ஓட்டிற்குள் வைத்துக் கோழிபுடம் போடவும். இந்த தாம்பிரம் 10-பங்கும் வெள்ளிஒருபங்குஞ் சேர்ந்துருக்கித் தகடித்து ஷை மூன்று சரக்குகளையும் நாயுருவி நெருஞ்சியிலை ரசம் விட்டரைத்து முன்போலப்பூசி புடம்போட நன்றாய் சுத்தியாகும்.

## (6) தாம்பிரசுத்தி (வேறு)

கொருக்காய்புளியிலை இரண்டுபிடிஎடுத்து அரைத்து அதைதேங்காய்ப்பாலில் கரைத்து சூரியபுடத்தில்

இரண்டுநாள் வைத்து அதில் தாம்பாத்தை உருக்கி பத்துவிசை சாய்க்கவும் வெள்ளையாக ஆகும், களிம்பு போகும்.

## (7) தாம்பிரசுத்தி (வேறு)

தாம்பிரத்தகட்டை புளியிலைச்சார் யெலுமிச்சம் பழச்சார் இரண்டையும் ஒன்றாய்க் கலந்ததில் பத்து நாள் ஊரப்போட்டு பிறகெடுத்து நன்றாய்த் தேய்த்துக் கழுவிவிட்டு புளியாணைக்கிழங்கும் மணிப்புங்கன் பட்டையும் சேர்த்திடித்து அதற்குள் ஷை தகட்டுகளை பொதிந்து சீலமண்செய்து கெஜபுடம்போடவும். அகத்திப்பழுப்புச்சாறு, முருக்கிலைச்சார், நாய்ப்பாகல்சார், கொள்ளிலைச்சார், கழுதை மூத்திரம், இதுகளை ஓர் அளவாக யெடுத்துக்கொண்டு அதிலே ஒருபலம்பூநீரும் கருங்குண்டுமணியை அரைத்துவிளாங்காய் பிரமாணமும்போட்டு ஒன்றாய்க் கலக்கி வைத்துக்கொண்டு அதைபத்துபாகமாகப் பிரித்துஒவ்வொருபாகத்தில் ஒவ்வொருவிசையாகப் பத்து விசை ஷை புடம்போட்டத் தாம்பிரத்தை உருக்கிச் சாய்க்கவும் தங்கம்போல் சுத்தியாகும்.

## தாம்பிரத்தை சீக்கிரமாகயுருகச்செய்யும் முறைகள்.

தனித்தாம்பிரமானது சீக்கிரத்திலுருகாது அதை தனியாக உருக்குவதும் மெத்தகக்கடினம். மேற்கூறிய சுத்திமுறைகள் உருக்கும்படியான முறைகளும்எழுத வேண்டிய தவசியமாயிற்று.

நரி, ஆடு, ஆமை முதலியவைகளின் எலும்புகளையும் மிளகும் சிலாசத்தும் தூள்செய்து வைத்துக்கொ

ண்டு தாம்பிரத்தை உருக்கும்போது இதை சிட்டிகை யாகக் கிராசங்கொடுத்துவந்தால் அதிக சீக்கிரத்தில் உருகிக் கண்விட்டாடும். ஷை சூரணத்தைக் காந்தத் திற்குக் கிராசங்கொடுத்தாலும் காந்தமும் உருகும் ஷை யெலும்புகள் யெல்லாம் ஏககாலத்தில் கிடையா விட்டாலும் ஏதாகிலும் ஒன்றைமாத்திரம் எடுத்துக் கொண்டுஞ் செய்யலாம்.

## வேறு.

தாம்பிரத்தை சிவக்கக்காய்ச்சி பொற்சீந்தில் சாற்றில்தோய்த்து ஆரவிட்டு பிறகு மூசையில் வைத்து உருக்க சீக்கிரம் யீயம்போலுருகும்.

## வேறு.

சோயிக்கீரையையிடித்து ரசம்பிழிந்து வைத்துக் கொள்ளவும். லிங்கத்தை தூள்செய்து ஓர் ஓட்டில் போட்டு சிறுந்தீயாக எரித்துக்கொண்டு ஷை சாற்றால் சுருக்கிட்டு கிளரிக்கொண்டேவந்தால் மேல்படி லிங்க மானது மெழுகாய்விடும் கையில்வைத்துருட்டினல்கயி ரைப்போல் நீளும் இதுபதம். இந்தபதத்தில் எடுத்து வைத்துக்கொண்டு ஷை மெழுகில் கொஞ்சம் எடுத்து வாய்நீர்விட்டுக் குழைத்து தாம்பரத்தகட்டிற்கு இரு புரமும்பூசி ஊதினல் அதிசீக்கிரத்தில் உருகும்.

# ஜெயநீர் முறைகள்.

## பிரம்மமுனி சூத்திரம்.

தானென்றவிதினலே வெடியுப்பாச்சு
சத்தியுடாநாதமென்ற கெந்திசேரில்
ஆமென்றஅண்டரண்ட முருகிப்போச்சு
அரசர்கெடில்கல்கோட்டை யிடியலாச்சு

போமென்றகாரமென்ன வெடியுப்பாச்சு
புகழானசாரமென்ன நவாச்சாரமாச்சு
ஆமென்றசாரகார மிரண்டுஞ்சேரில்
அறுபத்துநால்சரக்குங் கட்டிப்போச்சே.

போச்சென்றகாரம்விட்டால் சாரமில்லை
புகழானசாரம்விட்டால் காரமில்லை
ஓச்சென்றசாரத்தின் மகிமையென்ன
ஒன்பதுநீர்சாரமொடு நவாச்சாரமாச்சு
தேச்சென்றசாரத்தின் மகிமைசொல்ல
சித்தர்முதல்ரிஷிகளால் முடியாதப்பா
ஆச்சென்றராமதேவர் சாரந்தொட்டு
ஆடிஞரேழுயுகம் வாதம்பார்த்தார்.

பார்த்திட்டகாரமென்ன உப்புஉப்பு
பாங்கானஉவருப்பு மண்ணுவாரி
வேத்திட்டமும்முறைதான் காய்ச்சுவார்கள்
வெடியுப்பாங்கடையில்விற்குங் கடுங்காரமில்லை
ஆத்திட்டுவாதமுறை செய்யவென்றால்
அந்தவுப்பைவாங்கியதை கரைசலத்தால்
வார்த்திட்டுஅடுப்பேற்றிக் காய்ச்சியுப்பு
வளருமந்தப்பதமறிந்து மறுபாண்டம்வாரே.

வார்க்கவேகம்பிபோல் வளருமுப்பு
மருத்துமந்தஉப்பிலே சுத்தஜலம்விட்டு
பார்த்துமேயடுப்பேற்றி யெறித்துக்காய்ச்சி
பதமறிந்துமறுபாண்டத் தெடுத்துவாறு
பூர்த்துமேகருவென்ன பழச்சாறுமோரு
புரைகுற்றுமாப்போல கொஞ்சம்வாறு
ஆர்த்துமேபொங்கியது வளர்ந்துஓங்கி
அதிமதுரம்வெடியுப்புக் கடுங்காரமாச்சே.

காரமாமிந்தவுப்பு வேதைக்காகும்
கரைதனில்மூணுங்காய்ச்சல் கருமருந்துக்காகும்
காரமாம்வெடியுப்பை செயநீர்செய்யில்
கருதியேசரக்கெல்லாங் கட்டிக்கொள்ளும்

பாரமாம்வாதத்துக் காதியுப்பு
பார்த்திட்டார்சித்தரெல்லாம் வேதைகோடி
ஆரமாம்வெடியுப்புச் செயநீர்கேளு
அறைகிறேன்ஆறுநீர் விவரந்தானே.

## வெடியுப்புச் செயநீர்.

காணவேபுளியும்நாலு கம்பிவெடியுப்புநாலு
ஊணவேகல்லுப்பதொன்று உற்றதோர்வழலைதான்
தோணவேயிந்துப்பதொன்று சூடனிதுகாலிடை
வேணும்நவாசாரமொன்று வெந்தெடுக்கசுன்னமே.

(இ-ள்.) புளி - 4, வெடியுப்பு காரமேற்றியது - 4, கல்லுப்பு - 1, வழலை அதாவதுமுப்பு-1; இந்துப்பு-1, கர்ப்பூரம்-¼, நவர்ச்சாரம்-1, இதுகளை ஷை இடைகளாக நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு நன்றாய் அரைத்து ஒருமண்பாண்டத்தில் போட்டு அடியில் தீயிட்டெரிக்கவும். பாண்டத்தின் வாயைமூடக் கூடாது இப்படி யெரிக்கும்போது மருந்தானது குப்பென்று பற்றிக்கொண்டு யெரிந்துஅடங்கிவிடும் பிறகு அதை ஆரவைத்து பாண்டத்தை யுடைத்து மருந்தைக் கல்வத்திலிட்டறைத்து ஓர் பீங்கான் பாண்டத்தில் பரவலாகப்போட்டு தண்ணீர்பானைக்கடியில் குளிர்ந்த இடத்துபுதைத்து மண்டலஞ் சென்றெடுக்கவும் ஜெயநீர் இறங்கிவிடும். பனிக்காலமாயிருந்தால் பீங்கான் தட்டில்போட்டு பனியில்வைக்க இறங்கிவிடும். அதிககாரமிருக்கும் இதை சுருக்கிட அறுபத்துநாலு சாக்கும் கட்டும் (இதுநல்லமுறை.)

## வேறு.

கம்பிவுப்பு பலம் பத்து, புளிபலம் எட்டு, சீனம், பூநாகம், துருசு, கற்பூரம். மூப்புச்சுன்னம் வகைக்கு கழஞ்சி ஒன்றுவீதங்கூட்டி அரைத்துந் தீக்கொளு

ததச் சுன்னமாகும், அதற்குபதினரில் ஒருபங்குநவா ச்சாரம் தூள்செய்து சேர்த்து முன்போல் செய்யில் ஜெபநீராகும் இதுவும் சரக்குகளைக்கட்டும்.

## அண்டச்செய நீர்.

சுண்ணும்பும் உழமண்ணும் ஒன்றுசேர்த்துஜலம் விட்டுக்கரைத்து அந்த தெளிவை இறுத்துக் கொண்டு அதிலே ஆற்றிலே இருக்கும் ஊமச்சிகளைப்போட்டு எரித்தால் சுத்தியாகும். ஷை சுத்திசெய்த ஊமச்சிக்கிளிஞ்சல் பலம்-5. வீரம்பலம்-1. சூடன் பலம்- 1. சாரம்பலம்-1. கல்லுப்புபலம்-1. இதுகளை வெண்கருவும் எருக்கம்பாலுங்கூட்டியரைத்து உலர்த்தி சாணக்கையில் வைத்து சீலைமண் செய்து 100 - வரட்டியில் புடமிடவும் மறுபடியும் வெண்கருவுமாத்திரம் விட்டரைத்து முன்போல புடம்போட தவளம்போல் நீறும் இச்சுன்னம் அடியில் எழுதியிருக்கும் கிளிஞ்சல் ஜெயநீர் முறைக்கும் உபயோகப் படுத்திக் கொள்ளவும்

அண்டச்சுன்னம்:—கோழிமுட்டை 5 - க்கு எலிமிச்சம்பழரசம் படி-1. அதில் ஷை முட்டைகளைப் போட்டு படிகாரம் பலம்-2. தூள்செய்துப்போட்டு 4 - 5- நாள் பொருத்துப்பார்த்தால் மேலோடு கரைந்திருக்கும். கருவைஜவ்வு பொதிந்துக்கொண்டிருக்கும் ஷை கருவையும் சேர்த்துக்கொண்டு ஜவ்வைமாத்திரம்நீக்கிவிடவும். இந்த வெய்யலில் உலர்த்தி எருக்கம்பால் விட்டரைத்து பில்லைசெய்துலர்த்தி சீலைமண் செய்து 80-வரட்டியில்புடமிடவும். பிறகு எடுத்து பத்துக்கு ஒன்று வீரங்கூட்டி வெண்கருவாலரைத்து 80 எருவில் புடம்போடக் கடுஞ்சுன்னமாகும். முன் தயார் செய்த சிப்பிச்சுன்னத்தோடு இதையுஞ்சேர்த்து இத

ற்கு சரிபாகம் நவாச்சாரம் தூள்செய்துக்கூட்டி தண்ணீர்பாணியின் அடியில்வைக்க ஜெயநீராகும் சரக்கெல்லாம்கட்டும் வெடியுப்புங்கட்டும்.

## கிளிஞ்சல் ஜெய நீர்.

மேலெழுதியபடி தயார்செய்த சிப்பிச் சுன்னம் பலம் - 1. காரமேற்றிய பொட்ளுப்புபலம்-4 வெங்காரம், படிகாரம் வகைக்குப் பலம் ஒன்றுவீதங் கூட்டி எருக்கம்பால் விட்டரைத்து பில்லைதட்டிக் காயவைத்து சாணக்கையில் வைத்து மண்சீலைசெய்து கோழிபுடம்போடச் சுன்னமாகும். மேல்படி சுன்னத்தை-௧, படி ஜலத்தில்போட்டுக் காய்ச்சி தெளிவிருத்து புட்டியில் ரப்பிக்கொள்ளவும். இந்த ஜெயநீரை மயில்துத்தத்திற்கு விட்டரைத்து ரவியில் காய்வைத்து ஓட்டிலிட்டு சீலைமண் செய்து (3) யெருவில் புடம்போட துருசுக்கட்டும் நவாசாரமுங்கட்டும்.

## நாகச்ஜெய நீர்.

தாமடாநாகசெய நீரைச்சொல்வேன்
    தம்பியடாசிறுகண்ணும் நாகம்வாங்கி
கேளடா அஞ்சுபலம் நிறுத்தெடுத்துக்
    கெடியாகஉருக்கியதைத் தகடாய்வார்த்து
போமடாசிறுசாகக் கத்திரித்துப்
    பொருமையுடன் தூளாகச் செய்துப்போடே.
போட்டவுடன் இன்னுமொன்று புகலக்கேளாய்
    பொருமையாய்சவ்வீரம் பலம்தான்ரெண்டு
தாக்குடாவெடியுப்புப் பலமும்ஒன்று
    தருவாகஇரண்டையுமே நேகரைத்து
போமடாமூன்றுமொன்ருய்க் கூட்டியேதான்
    பொருமையுடன்பீங்கானில் போட்டுமூடே.

மூடிபோனாள்மூன்று சென்றபின்பு
முன்வைத்தபீங்கானை எடுத்துப்பாரு
நாமடா ஜெயநீரை என்னசொல்வேன்
நன்றாகநாகத்தின் ஜெயநீராச்சு
தாமடாயிந்நீரில் வீரப்பூரம்
தருவானலிங்கமது கட்டுமாமே.

இரண்டு அங்குல அகலமும் - 12 அங்குல நீளமுமாக துணித்துண்டுகள் யெடுத்து ஒருதுண்டை ஷை ஜெயநீரில் தோய்த்து வீரம் பூரம் லிங்கம் முதலியவைகளின்மேல் சுற்றிக்கொளுத்தி விடவும் இவ்விதம் 7 - 8 - சீலைகள் சுற்றிக்கொளுத்த வீரம் பூரம் லிங்கம் முதலியதுகள்கட்டும். இது அவுஷதங்களுக்கும் வாத முறைகளுக்கு மாகும்.

## வகாரம்.

வெள்வங்கம் பலம்-1. தாளகம், வெள்ளைப்பாஷாணம், சவுக்காரம், சாரம், பூநீரு, கிளிஞ்சல் சுன்னம் வகைக்கு பலம்-1. எடுத்து எல்லாவற்றையுங் கல்வத்திலிட்டு நன்றாய் 2-ஜாமம் அரைத்துத்தூள்செய்து கலசத்தில் பாதிபோட்டு மேலே வங்கம்வைத்து அதன் மீது மற்றப் பாதிதூளையும்போட்டு வாயைமூடி சீலைமண்செய்து கோழிபுடம்போட வங்கம்வெட்டை யாகும். ஷை வெட்டையானவங்கம்-1. வெள்ளி-1. சூதம் 2. சாரம்-¼. வெடியுப்பு ஜெயநீரால் அரைத்து பில்லை தட்டி உலர்த்திக் காயவைத்து அகலில்மூடி சீலைமண் செய்து கோழிபுடம்போட பஸ்பமாகும். செம்பையுருக்கி அதில்பத்துக்கு ஒருபங்கு பஸ்பத்தைப்போட வெளுத்துவிடும் அதோடு நல்லவெள்ளி அரைபங்கு சேர்த்து-4-5-தடவைகள் உருக்க யெல்லாம் சேர்ந்து இரசவாதவெள்ளியாகும்.

## வேறு.

வெள்ளை பாஷாணத்திற்கு, சிப்பிசுன்னம் கவசம் செய்து மணலில்வைத்து சீலைசெய்து எரிக்கச்சுத்தியாகும். அதையெடுத்து மேலே வெள்ளி ரேக்குசுத்தி அதை அப்பிரேகத் தகட்டின்மீதுவைத்து சாரப்பாம்பின் கொழுப்போடு சமபாகம் வீரஞ்சேர்த்து செய்யாயுருக்கி அதை சுருக்கிடமெழுகாகும் 4-பங்குசெம்புருக்கி ஒருபங்கு பாஷாணமெழுகைக் கொடுத்தால் வெளுத்துவிடும் 4 - க்கு ஒருபங்கு நல்லவெள்ளி சேர்த்து உருக்கினால் எல்லாஞ்சேர்ந்து இரசவாதவெள்ளியாகும்.

## வேறு.

செம்மண் பூமியில் பள்ளம்வெட்டி அதில் வரகு வைக்கோல்போட்டு வெல்லத்தண்ணீர்தெளித்து மண் மூடிவிட்டு 5-6-நாள் பொருத்துத் தோண்டினால் பூநாகம் கிடைக்கும். அந்தப் புழுக்களை யெல்லாம் வாரி மோரில் போட்டால் வயிற்றிலுள்ள மண்ணெல்லாம் கக்கிவிட்டு சுத்தியாகிவிடும். அதற்குச் சரியாய் கந்தகம் சேர்த்து அருவகைஜெயநீரால் அரைத்து பில்லை தட்டி புடம்போட கருப்புத்தூளாகும். அதற்கு 4 ல் ஒருபங்கு வெங்காரம்சேர்த்து வஜ்ஜிரமூசையில் வைத்து சீலைசெய்து உலையில்வைத்தூத பூநாகம் செம்பாகும். மேல்படி செம்பினால் டப்பிசெய்துதிருகுவைத்து அதற்குள் சூதம் விட்டு டப்பிமூடி சாதம் வேகும் போது மத்தியில்வைத்து சாதம்வெந்தவுடன் யெடுத்துக்கொண்டு ஆரவிட்டுத் திறந்துப்பார்க்க சூதம் மெழுகாயிருக்கும். அந்த மெழுகை கருவூமத்தன் காயிற்குள்வைத்து சாரமும் சுண்ணும்புஞ்சேர்த்து சீலைமண் செய்து நான்குவராட்டியில் புடமிட ரசங்கட்டும் இப்

படி பத்துவிசை புடம்போட மணியாகும். இதை பரி
க்ஷிக்க யெல்லாவித பரிக்ஷைகளுக்கும் ஒத்திருக்கும்
வெள்ளீயம் உருகும்போது போட்டால்நீரை இழுத்து
வெள்ளியாக்கும். ௸ மணி இந்திரியஸ்தம்பனமும்
செய்யும்.

## வேறு.

வெள்ளைப்பாஷாணம் சுத்திசெய்து கபால ஓட்டிற்கு அடியில் மண்பூசி ௸ ஓட்டில் பாஷாணத்தை வைத்து ஒருபடி புங்கம்பாலால் நான்கு ஜாமம் சுருக்கிடவும் பிறகு ௸ காயும் வெள்ளாட்டுமூளையும்சேர்த்தரைத்து ௸ பாஷாணத்திற்குக் கவசங்கட்டி மண்மறைவில் 5-வரட்டியில் புடமிடவும். இப்படி 5-6-புடங்கள் போட பாஷாணமானது கட்டுப்படும் செம்பையுருக்கி ௸ பாஷாணக்கட்டியில் கொஞ்சம் தூள்செய்து போட்டால் வெளுத்துவிடும் அதற்கு சரியிடை சுயமான வெள்ளிசேர்த்து உருக்கிக்கொண்டால் எல்லாம்சேர்ந்து இரசவாத வெள்ளியாகும்.

## வேறு.

### பூநீறு ஜேயநீர்.

சுண்ணாம்புக்கல் படி - வ, உழமண் படி - வ, கல்லுப்பு படி - வ, சிறுபிள்ளைகளின் மூத்திரம் படி - 2, இவற்றை ஒன்றாய்க்கலக்கி சிறுந்தீயாக யெரித்து ஒரு புதுப்பானையில்விட்டு அடுப்பைப்போல கல்லை யடுக்கி பானைக்கு அடியில் ஒரு பீங்கானை வைக்கவும். பானையினடியிலிருந்து நீர்கசிந்துக்கொண்டிருக்கும். வடியும் நீரையெல்லாம் சேகரித்து ஒரு சீஷாவிற் பத்திரப்படுத்தவும் அல்லது (Filter Paper) னால் வடிகட்டிக்கொள்ளலாம். இதுவே பூநீற்றுஜெயநீராம். மண்டை ஓடு பொடி பலம் - க, பொட்டுலுப்பு பலம் - க, இவை

[illegible]

இரண்டையும் ஓர் பாண்டத்தில்போட்டு அதில் சுத்தி செய்த சங்குபாஷாணம் ஒரு பலம், ஓரே கட்டியாய் போட்டு ஷை தயார்செய்த ஜெயநீர் 8 - பலம்விட்டு சிறுந் தீயாயெரித்து வரும்போது நீரெல்லாம் சுண்டி மெழுபதம்வருஞ் சமயத்திலிறக்கி பாஷாணக் கட்டியை வேறே எடுத்துக்கொண்டு பாண்டத்திலுள்ளதை சுரண்டி எடுத்துக் கல்வத்திலிட்டு அரைத்து ஷை பாஷாணத்திற்குக் கவசம்செய்து ஏழு சீலமண் செய்து நன்ருய் உலர்த்தி கோழிபுடம்போட சுன்னமாகும். இந்த சுன்னம் கால்பலம் சவுட்டுப்பு கால்பலம் வாய் நீராலரைத்து 2 - பலம் வெள்ளீயத்திற்குப்பூசி மேலே சீலமண்செய்து அரைகெஜம்புடம்போடவும்ஷை யீயத்திலுள்ள நீரெல்லாம் நீங்கி வெள்ளியாகும்.

## வேறு.

பாஷாணம் பலம்-க, ரசம் பலம் - க, பூரம் பலம்-க, வெடியுப்புச் செயநீரால் அரைத்து ரவியில் காய வைத்து, இதை சட்டியில் போட்டு மேல்சட்டிமூடி சீலமண்செய்து நான்குஜாமம் எரிக்க பதங்கமேறும். ஷை பதங்கத்தை சுரண்டி பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டு சுத்திசெய்த செம்புக்கு பத்துக்கொன்று கொடுக்க வெளுத்துவிடும். இதோடு இரண்டுக்கு ஒரு வெள்ளி சேர்த்துருக்க எல்லாம் சேர்ந்து இரசவாத வெள்ளியாகும்.

## பாஷாணக்கட்டின் பரிக்ஷைகள்.

கவராகமுன்கட்டும் பாஷாணத்தைக்
கருச்சொல்வேன் நன்ருகக்கேளுகேளு
தவராகமயிரளவு பகைஞ்சுதானல்
சமத்தானமுழுக்கட்டு தன்னைக்காணு

மூலராகஊசிபோல் புகைஞ்சுதாளுல்
முத்தமனேமுக்காலே கட்டுமாகும்
நவராகக்கதிரதுபோல் புகைஞ்சுதாளுல்
நலமான அரைக்கட்டு நாடிப்பாரே.
பாரப்பாஎழுத்தாணி போலாந்தூபம்
பரிவாகக்காற்கட்டுப் பரிந்துப்பாரு
நேரப்பாஇத்தனையு முறுக்கையிலேகாணும்
நிறையாகப்பாஷாணங் காய்ச்சயிலேகாணும்
சாரப்பாஇதுவெல்லாம் தொழிலுக்காகும்
சாகாமற்செத்துநின்ற மார்க்கமப்பா
வேரப்பாலோகமதி லூட்டும்போது
ஓடுகிறபுகையடங்கி வேதையாமே.

## கடுங்காரச் செய நீர்.

பூநீர், கல்சுன்னம், இதுகள் இரண்டையும் அமு ரிவிட்டுக்கலக்கி, 3-நாள் பொருத்து தெளிவிருத்து அதில் அஞ்சு சுண்ணம் காசிடை, வங்கச்சுன்னம், வெடியுப்புச்சுன்னம், சீனம், சூடன், சாரம், வீரம், நாபி, வெங்காரம், குருவண்டு, சூதம், புழுகு, புனு கச்சம், கோழிமலம் இதுகள் வகைக்குக் காசிடை போட்டு அதில் கோழிமுட்டை வெள்ளைக்கரு-30. எருக்கம்பால் சேர்-1, விட்டால் தெளிவு ஜெயநீர்கா ணும் முப்புவுக்குக் காரமேற்றவுதவும். சகல சரக்கு களையுந் தோய்த்துப்போட்டால் கடுங்காரமேறும்.

## பொன்னின் சுலக்ஷணம்.

பொன்னதுவின்சோதனையும் பதினொன்றுகும்
பொடியாகப்போகிறதோர் வெட்டைநீங்கி

நன்னயமாய்க்கம்பிக்கு நயந்துதானே
நலமுடனேகாய்ச்சவுந்தான் வருணம்மாறு
உன்னியதோர்பளபளப்பு நீங்கலாக
உத்தமனேபடிகாரம் பிடித்தலோடு
உயர்பொன்னின்லக்ஷணமாம் அடியில்கண்ணே.

(இ-ள்.) பொன்னானது வெட்டையா யிருக்கக் கூடாது, கம்பிக்குவரவேணும், காய்ச்சினால் வருணம் மாறலாகாது, படிகாரம் பிடிக்கவேண்டும். தற்காலப் பரிக்ஷையாகிய வெடியுப்புதிராவகத்தில் (Nitricacid) கரையாமல் நிற்கவேண்டும். உருக்கினால் அடியில்வலை களைப்போன்ற கண்களுடன் பசுமைநிறமும் பொருந் தியிருக்கவேண்டும். இப்படி எல்லாலக்ஷணங்களும் பொருந்தியது செயற்கைப் பொன்னாயினும் நல்லபொ ன்னாகும்.

## வகாரம்.

துருசுக்கு உத்தாமணிப்பால் தளும்ப அடித்து வெய்யலில் நன்றாய்க் காயவைத்து, உலர்த்திப் பின்பு மேற்படி இலை ரசம்விட்டு அரைத்துப் பில்லைதட்டி நன்றாய்க் காயவைத்து மேற்படி இலையையரைத்து மேற்படி பில்லைக்குக் கவசம்கட்டி அகலில் வைத்து சீலைமண் செய்து குக்குடம் போட செந்தூரிக்கும். கொக்குமந்தாரைச் சாற்றில் 7-விசைக் காய்ச்சித்தோ ய்த்துச் சுத்திசெய்த தாம்பரம் பத்துபங்கையிருக்கி மேற்படி செந்தூரம் ஒருபங்கு கண்விட்டாடும்போது கொடுத்துக் கோலாட்டவும் இரசவாதப்பொன்னாகும்

## தாளகக்கட்டு.

துருசை, தும்பை, குமரி, பழச்சார் மூன்றும் விட்டாட்டி தாளகத்திற்குக் கவசம்செய்து மண்சீலை

செய்து கோழிபுடம்போடவும். இப்படி பத்துபுடம் போட கட்டிவிடும் மேற்படி தாளகக்கட்டு பலம்-க, கெந்தகம்பலம்-க வெடியுப்புச் செயநீர்விட்டரைத்து பில்லைதட்டி கோழிபுடம்போடவும் செந்தூரமாகும். 7-வெள்ளி 3-செம்பு சேர்த்துருக்கி மேற்படி செந்தூரம் (க) கொடுக்க நல்லமட்டமாகும். மேற்படி மட்டம் நாலுக்கு ஒருதங்கம் சேர்த்துருக்கிக் கொள்ள எல்லாஞ்சேர்ந்து இரசவாதப்பொன்னாகும்.

## வேறு.

| | |
|---|---|
| செம்புத்தொட்டி | பலம்-க |
| மணலிரும்பு | ,, க |
| வெங்காரம் | ,, க |

மூன்றையும் தேன்விட்டரைத்து குகையில்வைத்து சீலைமண் வலுவாகச்செய்து உலக்களத்தில்வைத்து ஊதவும். இப்படி இன்னும் இரண்டுவிசை செய்ய மேற்படி பாஷாணத்தி லிருக்கப்பட்ட செம்பும் இரும்பும் சேர்ந்துக் களங்கமாகும் அதை நான்கு பங்கு வெள்ளிக்கு ஒன்று சேர்த்துருக்க நல்ல மட்டமாகும். அதோடு சமயோசிதம்போல் தாய்சேர்த்து உருக்கிக்கொள்ளவும். எல்லாஞ்சேர்ந்து இரசவாதப் பொன்னாகும்.

## நீலவர்னத் தைலம்.

துருசு, வெங்காரம், கெந்தி, தாளகம், லிங்கம், வீரம்- பூரம், கௌரி, வெள்ளை, சூதம், சாரம் இதுகள் வகைக்குப் பலம் எடுத்துத்தூள்செய்து ஒருபன்றிக் குட்டியை வயிற்றைக்கீறி அதற்குள் மேற்படி தூள்களைப்போட்டுத்தைத்துவிட்டு, அதை ஒருபாண்டத்திலிட்டு மேல்மூடி சீலைமண்செய்து குழிவெட்டிப்

புதைத்து மண்டலஞ்சென்றெடுத்துப் பார்க்க நிறைய புழுவுபுழுத்திருக்கும். அதைஎடுத்து புட்டியிலிட்டு சீலைசெய்து கொதிக்கிற ஜலத்தில்பிடித்தால் தைலமாகும் வெள்ளி செம்புகளை உருக்கிவிட்டால்பழுக்கும் மட்டத்திற்குப்பூசி புடம்போட மாற்றுயரும்.

## வகாரம் (வேறு)

பித்தளை அரப்பொடி, பூவரசங்காய், கல்யாண முருக்கம்பூ, மூன்றையும் கல்யாண முருக்கிலைச்சார் விட்டரைத்து மாத்திரைகள்செய்து செங்கண்சாவலுக்கு மேற்படி உருண்டைகளைகொடுத்து அதன்மலமெல்லாம் ஒன்றாய்ச்சேர்த்து மூசையில்வைத்து ஊதவும். நல்லமட்டமாகும் அதோடு சமயோசிதம்போல் தங்கம் சேர்த்து உருக்கிக்கொள்ள எல்லாம்சேர்ந்து இரசவாதப்பொன்னாகும்.

## பூரக்கட்டு.

பூரம் பலம் (க) வெள்ளாட்டுப் பாலால்-8-ஜாமம் சட்டியிலிட்டுச் சுருக்கிட்டு பிறகு பசும்பாலால் 4-ஜாமம்சுருக்கிட்டு, பிறகு, வெடியுப்பு, சீனம், துருசு, சிங்கி வகைக்குப் பலம் கல்வத்திலிட்டு யெருக்கம்பாலால் அரைத்து மேற்படி பூரத்திற்குக் கவசம் செய்து ரவியில்காயவைத்து -7- மண்சீலைசெய்து சட்டியில் பூமணலிட்டு அதன்மத்தியில் மேற்படி சீலைசெய்ததை வைத்து மேலோடுமூடி சீலைசெய்து கமலாக்கினியாய் 4-ஜாமம் யெரித்து பிறகு சீலை அவிழ்த்து பூரத்தை யெடுத்துக்கொண்டு, அதனிடை ஈயச்செந்தூரத்தை வெண்கருவிட்டரைத்து மேற்படி பூரத்திற்குக் கவசம் செய்து மணல்மூடி மறைபுடமாக கோழிபுடம் பத்து போடவும். ஒவ்வொரு புடத்திற்கும் புதியசெந்தூ

மாக உபயோகிக்கவும். பிறகு துருசு, வெடியுப்பு, காரம், சாரம், சீனம், கரியுப்பு, ஆலம்பாலலாட்டி ஷைபூரத்திற்குக் கவசங்கட்டி சுண்ணும்பு சீலை செய்து மண்மறைவில் கோழிபுடம் அதற்குமேல் வராக நெய்யால் 4-ஜாமம் சுருக்கிட பூரம் புகை யடங்கி உருகிக் கட்டும். வெள்ளி 100-க்கு ஒன்று கொடுத்துப் பார்க்கவும் சர்வவியாதிகளுக்கும் அனுபானமறிந்துக் கொடுக்கத் தீரும்.

## வீரக்கட்டு.

வீரம் சுத்திசெய்து வில்வபழத்திற்குள் வைத்து சீலைசெய்து மணல்மூடி மறைபுடமாக கோழிபுடம் 10-போடவும். ஈயச்செந்தூரம் பழச்சார்விட் டரைத்து கவசம்செய்து மண்மறைவில் கோழிபுடம்போடவும். பிறகு மிருகார்சிங்கி வெண்கருவா லரைத்துக் கவசம்செய்து மண்மறைவில் கோழிபுடம் 10-போடவும். மறுபடியும் வெட்டிக்கொட்டையை பழச்சார் விட்டரைத்து கவசம்செய்து மண்மறைவில் கோழி புடம் இதோடு வீரமணியாகும்.

“ஆனைமே லேறுவேன், வீரமணிக் கட்டுவேன், அகப்பட்டபயல்களை மண்டையுடைப்பேன்.” ஆனையென்னும் வாசியின்மீதேறி தன்னிடமிருக்கும் வீரத்தை மணியாகக்கட்டினுல் அகப்பட்ட லோகங்களையெல்லாம் பழுக்கவைக்க முடியுமென்ருர். வீரமணி வலோகத்தையும் வேதிக்கும்.

## லிங்கக்கட்டு.

மூலைப்பால், சங்கன்பழ ரசம், எலிமிச்சம் பழரசம், இதுகளில் வகைக்கு 4-ஜாமம் அழிஞ்சி தைலத்தால் 2-ஜாமம் மேதிப்பால் கற்றுழைரசம் கூட்டி - 4-

ஜாமம் எருக்கம்பால் 4-ஜாமமாகச் சுருக்கிட்டு பிறகு தாம்பரப்பொடி, சூதம், சிங்கி, தாரம், அரப்பொடி, பழச்சாற்றால் அரைத்து கவசம்செய்து சுண்ணம்பு சீலைசெய்து உமிப்புடத்தில் கோழிபுடமாக 10-புடம் போடவும். லிங்கம் கட்டிப்போகும். 7-பங்கு வெள்ளி 3-பங்கு செம்பு, ஒருபங்குலிங்கம் சேர்த்துருக்க வேதிக்கும்.

## நாகக்கட்டு.

சுத்திசெய்த நாகம் பலம் (க) உருக்கி, நவாச்சாரத்தூள் பலம் (2) கொஞ்சம் கொஞ்சமாய்க் கொடுத்து எடுத்துக்கொண்டு, தாளகம், மிருதார்சிங்கு,நாகத்திடை எடுத்து பழச்சாற்றாலாட்டிக் கவசம்செய்து கோழிபுடம்போடவும். வீரம், பூநீறு இரண்டுஞ் சேர்த்து முன்போல் புடம்போடவும். பொன்னிமிளை-2-களஞ்சி உருக்கிக்கொடுக்கவும். நாகம் முழுக்கட்டாகும், சுத்திசெய்த செம்பு 4-க்கு ஒரு நாகம்கொடுக்க நல்லமட்டமாகும் அதோடு சமபோசிதம்போல்தங்கம் சேர்க்க இரசவாதப் பொன்னாகும்.

## துருசுக்கட்டு.

துருசை கிளிஞ்சல் ஜெயநீர் விட்டரைத்துப் [illegible] லைதட்டி வெய்யலில் நன்றாய்க் காயவைத்து ஒட் [illegible] குள் வைத்துசீலைமண்செய்து 20 - வரட்டியில் புட [illegible] போட துருசு உருகிக்கட்டும் அதை மேற்படி ஜெ [illegible] நீரைவிட்டரைத்து வீரத்திற்குக் கவசங்கட்டி [illegible] த்தி சீலைமண்செய்து நான்கு வரட்டியில் புடம்போ [illegible] வீரம் உருகிக்கட்டும் மேற்படி இருவகைக் கட்டுகளை யும் சமனிடைகளாக யெடுத்து மேற்படிஜெயநீர் விட் [illegible] அரைத்து தங்கத்தகட்டிற்கு இலேசாகத் தடவி ஓட [illegible]

டில்வைத்தூ 7-வரட்டியில் புடமிடவும் இப்படி மூன்றுபுடம்போட தங்கம் குருவாகும். நான்குபங்கு சுத்தவெள்ளியை உருக்கி ஒருபங்கு குரு கொடுத்தால் இரசவாதப்பொன்னுகும்.

## தாளகமெழுகு.

சுத்திசெய்த தாளகத்தை வெங்காயச் சாற்றில் ஏழுநாள் ஊறவைத்துக் கல்வத்திலிட்டு அதே ரசம் விட்டரைத்து பில்லைதட்டி நன்ருய் உலர்த்தி மேலே துணிசீலைநன்ருய்சுத்தி தந்திக்கம்பியால் நன்ருய்கட்டி ஒருபானையில் தொளாந்திரமாக தொங்கவிட்டு - 12-பலம் பன்றிநெய்யும், 12-பலம் வெங்காயச்சாறும் விட்டு சிறுந்தீயாக நான்குசாமம் எரித்து சீலையை அவிழ்த்துப்பார்க்க மெழுகாயிருக்கும். சுத்திசெய்த செம்பு 10-பங்கு, வெள்ளி ஒருபங்கு ஷை மெழுகு 1 - பங்கு உருக்க இரசவாதப் பொன்னுகும்.

## போகர் வகாரம்.

ஏழுசிபிடிக்குங் காந்தம் எடுத்துக்கொண்டு அதற்கு சரியிடையாக சுன்பத்தல் செம்புரேக்கை நிறுத்தடுத்து இரண்டையுங் கல்வத்திலிட்டு அறைத்தால் தூளாய்ப்போகும். மேற்படி தூளுக்கு சரியிடையாக வெள்ளி சேர்த்து யெல்லாம் மூசையிலிட்டு நன்ருய் ஊதவேண்டும். காந்தம் சீக்கிரத்தில் உருகாதாகையால் வஜ்ஜிரமூசையில்வைத்து உலையில்வைத்தூத வேண்டும். மேல்படிகாந்தம் செம்புகளின்சத்து வெள்ளிக்கேறி இரசவாதப்பொன்னுகும்.

## லிங்கமெழுகு.

சுத்திசெய்த லிங்கம் பலம்-1. எடுத்து அபிரேகத்தகட்டின்மீது வைத்து, சேர்த்துக் கத்தாழையை

மேல்தோலை போக்கிவிட்டு ஒரு ஏனத்தில்போட்டு அதில் கடுக்காய்த் தூளைப்போட்டுப் பிசைந்தால் ஜலம் வரும். மேல்படி நீரினுல் ஒருஜாமம் சுருக்கிட்டு யெடுத்துக்கொண்டு சீனம், துருசு, (துத்தம்) வெங்காரம், பூநீர், வகைக்கு அரைப்பலம் எடுத்து வெள்ளெருக்கன் பாலால் அரைத்து மூன்றுபங்குசெய்து ஒரு பங்கை மேல்படி லிங்கத்திற்குக் கவசம்செய்து நன்றாய்க் காய்ந்தபிறகு மற்றொருபங்கைகவசம்செய்து அதுவும் நன்றாய்க்காய்ந்தபிறகு மூன்றாவது பங்கையும் கவசம்செய்துலர்த்தி, ஐந்துமண்சீலைசெய்து கோழிபுடம் போடவும் லிங்கம் கட்டுப்படும். மேல்படி லிங்கத்தின்மேல் ஒருவிராகனிடை தங்கரேக்கை சுத்தி அபிரேகத் தகட்டின்மீது வைத்து, கொடிக்கள்ளி செடியை அடியில் பொத்தல் செய்து அதற்குள் ஒரு சீலையில் கொஞ்சம் துருசுசுன்னம் வைத்துசொருகிவிட்டால் ஷை மரத்திலுள்ள பாலெல்லாம் முறிந்து ஜலமாகவடியும். ஷை ஜலத்தால் சுருக்கிட்டுக்கொண்டே ஊசியினுல் குத்திப் பார்த்தால் இரங்குமாகில் மெழுகாகி விட்டதென்று நிதானித்தெடுத்து கல்வத்தில் அரைத்து வைத்துக் கொள்ளவும் ஒரு தோலாவெள்ளியை யுருக்கி அதற்கு ஷை மெழுகு ஒருகுண்டுமணியிடை கொடுத்தால் உயர்ந்த இரசவாதப் பொன்னுகும்.

## குறைந்த மாற்றுள்ள பொன்னை மாற்றேற்றும் அப்ஜா முறைகள்.

### 1. அப்ஜாமுறை.

வீரம் சுத்திசெய்து வில்வபழத்துக்குள் வைத்து சீலைசெய்து மண்மறைவில் கோழிபுடம் போடவும்

இப்படி 40 - புடம்போட வீரம்கட்டும். அதை உமி நீரால் அரைத்து மட்டப்பொன்னுக்குப்பூசி பூங்காவி க்குள் வைத்து புடம்போட மாற்றுஏறும்.

## 2. அப்ஜாமுறை (வேறு.)

சோற்றுப்பை புளியர்ரைச் சார்விட்டு அரைத்து பில்லைதட்டி உலர்த்தி அகலில்வைத்து சீலை செய்து கோழிபுடம்போடவும். இப்படி-15-புடம்போட செந் தூரமாகும். சரக்கொன்றைப்பூவும் கெந்தகமும் சேர் த்தரைத்து பில்லைதட்டி குழித்தைலம் வாங்கி மேல் படி தைலத்தால் மேல்படி செந்தூரத்தைக் குழைத்து மட்டப் பொன்னுக்குத் தடவி புடம்போட மாற் றேறும்.

## 3. அப்ஜாமுறை (வேறு.)

கோழிமுட்டைகளை வெவித்து மேலோடுபோக்கி மஞ்சட்கருவைமாத்திரம் எடுத்து எண்ணைபழகியசட் டியிலிட்டு எரித்துவரவும் முட்டை கருகிவரும்போது சுத்திசெய்த பூநீற்றை கொஞ்சம்போட்டுக் கிளறிவந் தால் தைலம் கசிந்து இறங்கும். கெந்தகத்தை தூள் செய்து ஒருசீலையில்வைத்து உருட்டி திரிசெய்து ஷ தைலத்தில் நனைத்து சுடர்தைலம் இறக்கினால் கருப்பு வர்னமாக கெந்தகத்தைலம் இறங்கும். அதைமட்டப் பொன்னுக்குப்பூசி உருக்க மாற்றேறும்.

## 4. அப்ஜாமுறை (வேறு.)

துருசுக்கு சுண்ணாம்புசீலைசெய்து 3 - நாள் உலர வைத்து புடம்போட சுன்னமாகும். மேல்படி புடம் போட்டதுருசு, சூதம், லிங்கம், வெங்காரம் வகைக்கு சமனிடைகளாக யெடுத்து பெலிக்காலின் தழையின்

ரசம்விட்டரைத்து பில்லேதட்டி உலர்த்தி அகலில்வை த்து சீலேமண்செய்து கோழிபுடம்போடவும். மேல் படி மருந்தைஎடுத்து பத்திரப்படுத்தவும். அதில்கொ ஞ்சம் எடுத்து உமிநீர்விட்டுக் குழைத்து மட்டப்பொ ன்னுக்குப்பூசி காவித்தூளிற்குள்வைத்து 5 - வரட்டி யில் புடம்போடவும் மாற்றேறும்.

## வெட்டைப்பொன்னே நைப்பாக்கு முறை.

வாதமுறைக்காம் உபயோகிக்கும் மருந்துகளே உலோகத்தின்மீது கொடுத்தால் பொன்னுகும். அல் லது வெள்ளியாகும். ஆனுல் சிலசமயங்களில் அப்படி யாவதானது வெட்டையாகிவிடுவதுமுண்டு வெட்டை யென்றுல் சுத்தியினுல்அடித்தால் தூளாகநொறுங்கிப் போவது அல்லது கம்பிதகடுமுதலியவைகளுக்கு வரா மல் விரிந்துபோவதாகும். இதன்காரணம் அதில் வர ட்சி மிகுதியாவதே இவ்விதமே இரசவாதத்திற்காக உபயோகப்படுத்தும் மட்டங்களும் வெட்டை யாகி வேலேக்கு உதவாமற் போகும். அவ்விதம் வெட்டை யானதை நைப்பாக்குமுறைகளே எழுதுவதற்கு முன் வெட்டையாக நேரிடும் சிலஏதுக்களே முன்னர் தெரிந் துக்கொள்ளவேண்டியது ஆவசியகம். ஏனெனில் வெ ட்டையாகும் ஏதுக்களேத் தெரிந்துக்கொண்டால் அ தைநீக்கிக் கொள்ள ஏதுவாயிருக்குமென்பதே. அவை யாவன:

ஒரு உலோகத்தை உருக்கி அதுஉருகிக்கண்விட் டாடும்போது அதன்முகத்திற்கொடுக்கவேண்டியமரு ந்தைக் கொடுக்கவேண்டும். அப்படியிருக்கச் சிலசம யங்களில் அதுநன்ருய்க் கண்விட்டாடி உருகுமுன்ன மே மருந்தைக் கொடுத்தால், கொடுத்த மருந்தானது

உள்ளும் புறமும் ஊடுருவிப்பாயாமல் உபயோகமற்ற தாகிவிடுவதோடு வெட்டையாகவும் ஏதுவாகும். ஆதலால் இந்தவிஷயத்தைக் கவனத்தில்வைத்து உலோகமாவது நன்றாயுருகிக் கண்விட்டாடியபின் மருந்தை கொடுத்து கோலாட்டவேண்டும்.

சிலசமயங்களில் உலோகத்திற் கொடு[torn] டிய மருந்தின் அளவு அதிகமாகி விடுவதி[torn] லது குறைந்தஅளவு மருந்தை உபயோகித்[torn] வர்ணம் ஏறுதிருந்த நிமித்தம் அதிக அளவான மரு[torn] ந்தை உபயோகிப்பதினாலும் வெட்டையாகிவிடும். சிலமருந்துகளின் சுபாவகுணமே அதனையுபயோகித்த உலோகத்தை வெட்டையாக்கி விடுவதுண்டு. ஆதலால் இந்த விஷயங்களை கவனித்து கீழ்க்காணுமுறைப்படி ணைநப்பாக்கிக் கொள்ளவேண்டும்.

சிலசமயங்களில் பாஷாணம், தாளகம், கெந்தகம் முதலியவைகளில், ஒன்றின் சிலபாகம் உபயோகிக்கு மருந்தில் பச்சையாக இருந்துவிடுவது, அல்லது கும்மட்டியிலுள்ள கரியில் கலந்துக்கிடப்பது, அல்லது உருக்கு மூசையில் அவற்றின் வாடையிருந்து அதில் உருக்கநேரிடுகிறது. இந்தக் காரணங்களினால் உலோகமானது வெட்டையாகிவிடும். ஆதலால் இவ்விதவிஷயங்கள் நேரிடாதபடி ஜாக்கிரதையா யிருத்தல் வேண்டும். சிலசமயம் நாகம், காரீயம், மிருதார்சிங்கி இவைகளின் வாடை படுவதினாலும் உலோகமானது வெட்டையாகிவிடும். ஆதலால் இவ்விதசரக்குகளின் சம்பந்தம்வாடை முதலியவைக ளில்லாதபடி ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்.

சிலசமயங்களில் ஊதுகுழாய் முதலியவைகளிற் கெந்தகம், அறிதாரம் முதலியவைகளின் வாடை தங்கிநிற்பதுமுண்டு, அதனாலூதி உருக்கின லோகமானது ...ட்டையாகிவிடும் ஆதலால் இது விஷயத்தையும் ...கவேண்டும்.

...ங்களின் கரிநெருப்புகளும் உலோகங்களை ...க்கிவிடும் ஏனெனில் சிலமருந்தின்கரிக்கு ...வகுணமிருப்பதால், அதுவிஷயத்தையும் ...ண்டும்.

## வெட்டையை நைப்பாக்கு முறை.

நாம் முன்சொன்னபடி உருக்கின உலோகமானது வெட்டையானக் காரணத்தைக் கண்டறிந்து, அந்தக் காரணத்தை நீக்குவதே பிரதானமாகும். சிலசமயம் வெட்டையான உலோகத்தை மடக்கிமடக்கி உருக்குவதினாலும் அவ்வெட்டைத்தனம் நீங்கிவிடும். சிலசமயங்களில் அடியில்யெழுதிய தைலங்களால் அந்தவெட்டையை நீக்கவேண்டியதாயிருக்கும். ஆதலால் ஷெ முறைகளையும் இதில் யெழுதலாயினோம். இம்முறைகளின் மூலமாக அது எவ்விதமான கடினமான வெட்டையாக இருப்பினும் அந்த வெட்டைத்தன்மைநீங்கி நைப்பாகிவிடும். இன்னும் அதில் அதிகமாக உருக்கித் துவைத்தால் ஈயத்தைப்போன்ற நைப்புண்டாகிவிடும் இம்முறைகள் எல்லாம் அனுபவப் பட்ட தாகையால் வெகு இரகசியமாக வைக்கப்பட்டுவந்தன. ஆயினும் நமது நண்பர்களின் பொருட்டாகவும், நமது கிரந்த அபிமானிகளுக் காகவும், வெளிப்படுத்த லாயினோம் ஆதலால் அவசியமானவர்கள் இந்நூலின்முறைகளைச் சற்று கவனமாகவும் ஜாக்கிரதை யாகவும் செய்தால்

கடவுள் அது கிருபையால் நிச்சயமாகச் சித்தியாகும். அப்படிச்செய்யாமல் நாமொரு வழியாகவும், முறை ஒருவழியாகவுமிருந்தால் நாமெடுத்தகாரியம் முற்றுங் கைகூடாமல் தப்பிப்போமென்பதற்கு என்ன ஆக்ஷேபனையுண்டு. ஆகையால் விடாமுயற்சியுடன் எந்தக்காரியத்தையும் சிலதடவைகள் மடக்கி மடக்கிச் செய்யின் அந்தப்பாகத்திலுள்ள மர்மங்களெல்லாம் அநுபவத்தால் தெரிந்து முடிவில் நமதுகருத்தை நிறைவேற்றிக்கொள்ள ஏதுவாகும்.

## நைப்பெண்ணை.

குதிரை, ஆடு, மாடு முதலிய மிருகங்களின் குளம்புகள், கொம்புகள் முதலியவைகளைச் சமனிடைகளாக எடுத்துக் குழித்தைலம் இறக்கிச் சீஷாவில் பத்திரப் படுத்திக்கொள்ளவும். வெட்டையா யிருக்கிற உலோகத்தை உருக்கி, உருக்குமுகத்தில் ஷை தைலத்தில் இரண்டொருதுளிவிட, பட்டுப்போல நைப்பாகிவிடும். பொன். வெள்ளி முதலியவைகள் நகைமுதலியவைகள் செய்யவராமல் வெட்டையாகயிருந்தாலும், கடினமாகவிருந்தாலும், மேற்கண்ட விதப்படி செய்துக்கொண்டால் அதிக மிருதுவாகி எல்லாவகை நகைகள்செய்ய ஹேதுவாகிவிடும்.

தங்கம்வெட்டையாயிருந்தால் ரூமிமஸ்தகி, வெங்காரம் என்னும் இவ்விரண்டையும் சமனெடையா யெடுத்தரைத்துத் தங்கத்தையுருக்கிக் கிராசம் கொடுக்கவும். அல்லது குங்குமப்பூவைக் கிராசம்கொடுக்கவும் வெட்டைத்தனம் நீங்கிவிடும்.

## உருக்கினக் குடோரி.

தாளகம், சவுக்காரம், குங்கிலியம், அண்டோடு, வெங்காரம் வகைக்கு சமநிடைகளாக நிறுத்தெடுத்து வெடியுப்புச் செயநீராலாட்டிப் பில்லைசெய்து உலர்த்தி அகலிலிட்டு சீலைமண்செய்து கோழிபுடம்போட்டெடுத்துக் கல்வத்திலிட்டு எருக்கம்பாலும் காட்டாமணக்குப்பாலுங் கூட்டியரைத்துப் பில்லைதட்டி முன்போல் புடம்போட்டு எடுத்துக்கொண்டு சிற்றாமணக்கெண்ணையும், தவளைநெய்யும்விட்டுக் குழைத்து குழம்புபதமாக வைத்துக்கொள்ளவும். உலோகங்களை உருக்கி ஷை குழம்பு ஒருசொட்டுவிட்டு எருமைக் கொம்பால் நன்றாய்க்கலக்கவும் எவ்வளவு கடினமான வட்டையாயிருந்தபோதிலும் நீங்கிவிடும். கல்மிஷங்களெல்லாம்நீங்கி அதிக பளபளப்புடன் பிரகாசிக்கும் இது அதிக இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

## விரகுதிட்டம் புடதிட்டம்.

இரண்டுவிரல்கனமும் ஜான்நீளமும்உள்ள விரகு ஒருவிரகு தீபாக்கினிக்கும், இரண்டுவிரகு கமலாக்கினிக்கும். நால்விரகு காடாக்கினிக்கும் உபயோகிக்க வேண்டும். காட்டெருவு ஒன்றுகொண்டது காடைபுடமாகும், மூன்றுகொண்டது கவுதாரிப்புடமாகும், பத்துகொண்டது குக்குடம் அல்லது கோழிபுடமாகும்; அன்பதெருகொண்டது ஏனமாகும், நூறுகொண்டது கெஜப்புடமாகும்.

## குகைதிட்டம்.

கழுதைலத்தி பலம்-2, உமிக்கருகல் பலம்-2, கந்தைத்துணிஎரித்தசாம்பல் பலம்-2, களிமண்பலம்-12,

இவற்றை க கடுக்காய்க்கியாழம்விட்டு நன்றாயரைத்து மைபோலானபின்பு மூசைகளும் மேல்மூடும் பில்லைக ளும் செய்துக்கொள்ளவேண்டும். உருக்கினங்களுக்கு வேறுவகையாகச் செய்த மூசை பிலப்படாது.

## அஞ்சு சுன்னக்குகை.

சுன்னங்கள் செய்யவேண்டுமானால் அதிககாரம் உண்டாவதற்கு அடியிற் குறித்தபடி குகைசெய்து அதில்வைத்துப் புடம்போட அதிககாரமுள்ள சுன்ன மாகும். நண்டோடு, நத்தையோடு, சங்கு, கிளிஞ்சல், கோழிமுட்டையோடு இவைகள் சமயிடைகளாகக் கல்வத்திலிட்டு எருக்கம்பாலாலரைத்துப் பில்லைதட்டி ஓட்டிலிட்டு சீலைமண்செய்து அரைகெஜம் புடம்போ டவும் சுன்னமாகும் ஷெ சுன்னத்தை எருக்கம்பால், கோழிமுட்டைவெள்ளைக்கரு, சுண்ணாம்புஜலம் மூன் றும்விட்டுப் பிசைந்து குகைசெய்துக் கொள்ளவும் மேல்மூடியும் இதிலேயே செய்து வைத்துக்கொண்டு சுன்னம்செய்வதற்காக கவசம்செய்திருக்கும் சரக்கு களை ஷெ குகைக்குள்வைத்துப் புடம்போட அதிக கடுங்காரச் சுன்னமாகும்.

## இரசவாதிகள் அறியவேண்டிய முக்கியவிஷயம்.

தாம்பிரமும் வெள்ளியுஞ் சேர்த்துருக்கி மருந்து கொடுத்தமட்டமானது கருப்பாக யிருந்தால் அதை காடியில்போட்டுக் காய்ச்சவேண்டும் அந்தக்காடியா னது கருப்புவர்னமாகி விட்டால் அதை நீக்கிவிட்டு புதியகாடிவிடவேண்டும். இப்படி காடியானது விட்ட

படி சுத்தமாயிருக்கும்வரையில்செய்யவேண்டும் குறை ந்தவர்ண முள்ளதாகவும், கெட்ட வர்ணமுள்ளதாகவு மிருப்பதற்குக் காரணம் தாம்பிரத்தின் கெடுதியேயா கும். தாம்பிரமானது சுத்திசெய்யப் பட்டதா யிருந் தால் மேற்கண்ட குற்றங்கள் உண்டாகாது.

எடையில் அதிகப்பட்டிருக்குங் காரணமாவது தாம்பிரமானது பூரணமாய்ச் சாகாமல் பச்சையாக இருந்ததுவே காரணமாகும். வெள்ளியில் எடைகுறை ந்துபோவதற்குக் காரணமாவது கொடுக்கும் மருந்தா னது சரியாய் முடியாமல் பச்சையாக இருப்பதால்; வெள்ளியும், தாம்பிரமும், மடிந்துபோவதேயாகும்.

நல்லபொன்னானது உருக்கினால் ஒருபோதும் உப் பாது. அல்லது கொப்பளிக்காது. ஆகையால் சரியான பக்குவம்வரும்வரையில் மடக்கி மடக்கி யுருக்கவேண் டும். பொன்னையுருக்கினால் மேற்பக்கம் உருண்டைவடி வமாயிருக்கும். வெள்ளியை யுருக்கினால் தட்டையா கவுஞ் சமமாகவுமிருக்கும். இரசவாதத்திற்காக தயார் செய்யப்படும் மட்டமானது மேற்பக்கம் உருண்டை வடிவமாகவும் அடியில்வலையைப்போல் கண்களுண்டா கும்வரையிலும் தாயைச்சேர்க்கக்கூடாது. அப்போது மட்டத்தை மடக்கி மடக்கியுருக்கி யெடுக்கவேண்டும் இப்படி சிலதடவைகள் செய்தால் ஷி குணமுண்டா கிவிடும். வீணாக அவசரப்பட்டுத் தாயைச் சேர்த்தால் நஷ்டத்திற் கேதுவாகும். இவ்வித விஷயங்களை யெல் லாம் கவனியாமல் அனேகர் இரசவாதத்தில் அனேக மாயிரம் ரூபாயை வீணாய்ச்செலவுசெய்து ஒருபிரயோ சனமும் அடையாமல் இரசவாதம் பொய்யென்றே

சாதிக்க...றனர். புத்திநுட்பத்தினுல் தாங்களேயாவது அல்லது அனுபவ சாலிகளான ஆசான்கள் மூலமாக யாவது கிரமப்படி செய்வார்களாயின் எவ்விதத்திலும் நஷ்டமடைவதற்கேதுவிராதென்பது உண்மையாகும்,

## ஊர்வசிவாக்கு.

தேரவேரசவாதம் சிவசொத்தப்பா
செய்யாதேபொருள்தனையே இச்சிக்காதே
ஆரவேசெய்தாலும் பரத்துக்கிந்து
அறிவுகுருபோதத்தி லடங்கிநில்லு
பாழிநீபரபரப்பாய் திரிந்தாயானுல்
பலியாதுஅவன்தனக்கு வாதமேது
கூடாதுவாதமொடு ஞானம்ரெண்டும்
குருபதத்தைப்போற்றிசெய்யி லறிவிற்கூடும்
வீராகனன்னூலில் வெளியாய்ச்சொன்னேன்
விபரமுடன்ஊர்வசியும் விளங்கத்தானே.

குருசகாயம்

ஊர்வசி இரசவாத சிட்கா
முற்றிற்று.

---

## சர்வவிஷமுறிப்பு.

மனிதர்கள் ஒவ்வொருசமயத்தில் தமக்கும் தெரியாமல் யாதேனும் ஓர் ஆகாதபண்டங்கள் புசித்தால் அதற்கு இன்னது புசித்தால் இன்னவைகள் முறிப்பென்று கருதார்கள் ஆகையால் இந்த சர்வவிஷமுறிப்பி லுள்ளவையை கவனித்துக்கொள்வார்களானுல் எளிதில் தாங்கள்புசித்த ஆகாதபண்டத்தினுலுற்ற கெடுதியை அப்போதே முறித்துக்கொள்வதற்காகும். இதனை ஒருமுறைவாங்கிப் பார்த்துவிட்டாலும் ஓர் வைத்தியன் நமது அருகிலிருப்பதைப்போலாகும்.

இதன் விலை அணு-1.

புதிதாய் அச்சிட்ட

# மூலிகைஜாலரத்தினம்.

## முதல்பாகம்.

இந்த மூலிகைஜாலரத்தினமென்னும் புத்தகத்தில் ஆடும்மூலிகை 64-ன் விவரங்களும், அவைகள் வசியம், மோகனம், தம்பனம், உச்சாடனம், வித்வேஷணம், ஆக்ரஷணம், மாரணம் முதலிய அஷ்டமாசித்துகளை ஆடும் விவரங்களும், அவைகள் வைத்தியத்திற்கு உபயோகப்படும்படியான விவரங்களும், அனேகவசியமுறைகளும், தேள், பாம்பு முதலிய விஷத்துக்கு அனேக விசித்திரப் பிரயோகங்களும், அதிக யெளியகவிகளாகவும் அவைகளின் உரைகளுடனும், அதிக விவரமாய் அச்சிட்டிருக்கின்றது. விலை-அணா-4.

## மூலிகைஜாலரத்தினம் இரண்டாம்பாகம்.

இந்த மூலிகை ஜாலரத்தினமென்னும் புத்தகம் இரண்டாம்பாகத்தில், முதல் பாகத்தில் சொல்லியிருப்பதைவிட அதிக நூதனமானதும், கைவல்யமானதுமான முறைகள் அனேகம் அடங்கியிருக்கின்றன. அதாவது இந்திரியஸ்தம்பனம், ஜெகவசியம், திரிலோகவசியம், தேவவசியம் முதலிய அனேகவசியமுறைகள், அஞ்சனமைகள், பேய்களைவிரட்டும் முறைகள், பேய்களைஆட்டும்முறைகள், அஷ்டசித்திமூலிகைகளின்முறைகள், தேள் பாம்பு முதலிய சர்வ விஷங்களையும் நீக்கும்முறைகள், மோகினி-ஜின்-முனிமுதலியதேவதைகளை விலக்கும்முறைகள், குழந்தைகளுக்குண்டாகும் சர்வதோஷங்கள் வியாதிகளையும், பெரியவர்களுக்குண்டாகும் சர்வதுன்பங்களையும் நீக்கும்முறைகளும், இன்னும் அனேக அபூர்வமுறைகளும் அடங்கியிருக்கின்றன. இவைகளெல்லாம் நமது உள்நாட்டில் சுலபமாய்க் கிடைக்கக்கூடிய மூலிகைகளினை முடிக்கும்படியான முறைகள். விலை-அணா-4.

பூ. சு. குப்புசாமிமுதலியார்.
ஸ்ரீசுந்தரவிலாசஅச்சுக்கூடம்,
வேப்பேரிபோஸ்ட், மதராஸ்.